# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.3/2024

வாதி தரப்பு 2 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சோலையப்பன் | வா.சா.–2 | |
| த/பெ. | பெரியமாரிமுத்து | | |
| கிராமம் | புல்லாநாயக்கன்பட்டி | தொழில் | விவசாயம் |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 58 |

---

முதல் விசாரணை 12–06–2026.

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 2 வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கறிஞர் படித்துக் காண்பித்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். எனது ஆதார் அட்டை நகலை தாக்கல் செய்கிறேன். அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எனக்கு சாட்சியமளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி பொன்ராஜ் சொல்லிதான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் சரிதான். வீரநாகம்மாளுக்கு வாரிசு சான்று கேட்டு தாலுகா அலுவலகத்தில் மனு கொடுத்த விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். அந்த மனு சம்பந்தமாக கிராம நிர்வாக அலுவலர் ஊரில் விசாரணை செய்தாரா என்றால் ஆமாம். என்னையும் விசாரித்தார். நான் கிராம நிர்வாக அலுவலரிடம் வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் ஆமாம்.

வீரநாகம்மாளுக்கு நேரடி வாரிசு இல்லை என கிராம நிர்வாக அலுவலர் தெரிந்து கொண்டார் என்றால் சரிதான். நேரடிவாரிசுகளுக்கு மட்டும்தான் சான்றிதழ் கொடுக்க முடியும் என கிராம நிர்வாக அலுவலர் சொல்லிவிட்டார். வீரநாகம்மாளின் அம்மாவும் வாதியின் தாயாரும் உடன்பிறந்தவர்கள் என சாட்சி கூறுகிறார். வாதியுடன் பிறந்தவர்கள் யாரும் இருக்கிறார்களா என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.06.12 14:22:02 +0530